மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.03/2023
உள்
அசல் வழக்கு எண்.67/2023
––––––––

1. C.சுடலை அம்மாள்
2. C.முருகன்
3. S.சுப்புலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. S.உதயலட்சுமி
2. மோகனகிருஷ்ணன்
(அவரது தாயாரும் இயற்கை
காப்பாளருமான அவரது தாயார் மூலம்)
3. G. முருகலட்சுமி
4. S.கணபதி
5. D.சுந்தர மகாலிங்கம்
6. சார்பதிவாளர்
சாத்தூர் அலுவலகம்
சாத்தூர்.
7. மாவட்ட பதிவாளர்
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
விருதுநகர்.
8. மாவட்ட ஆட்சியர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம்.
10. மாவட்ட பதிவாளர்
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

11. மாவட்ட ஆட்சியர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு ... 9 முதல் 11 உத்தேச
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 23.08.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 02.02.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.உதயகுமார் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், 9 முதல் 11 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி 21.08.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்</u>**:–

இந்த வழக்கானது ஆவணங்களைப் பொறுத்த விளம்புகை பரிகாரங்களுக்காகவும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த W.P.No.1115/2022ல் உயிலானது 27.06.2018 தேதியன்று ஊர்ஜிதத்திற்கு வந்தது என்பதையும் செம்புக்குட்டி கண்ணனை தத்து எடுத்ததை உரிமையியல் நீதிமன்றத்தில் மட்டுமே தீர்மானிக்க முடியும் என்று தெரிவித்ததால் மனுதாரர்கள்/வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதியான

விஜயலட்சுமி 13ம் தபசில் சொத்தைப் பொறுத்து விற்பனை செய்தார் என்றும், அதனை தெரிந்து கொண்ட மனுதாரர்கள்/வாதிகள் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலத்தில் ஆட்சேபணை தெரிவித்தார். மனுதாரர்கள்/வாதிகள் கொடுத்த ஆட்சேபணையின் பேரில் திருப்போரூர் துணைப்பதிவாளர் ஒப்பந்தப்பதிவை தற்காலிகமாக நிறுத்திவிட்டார். 1ம் பிரதிவாதி உயர்நீதிமன்ற உத்தரவை மீறி கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார். கிரைய ஒப்பந்தமோ அல்லது கிரையமோ உயில் ஆவணத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டாலுமை மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும்., எனவே, 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்கள்/9 முதல் 11 எதிர்பார்ப்பு பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. தவறும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே, 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>

மனுதாரர்கள்/வாதிகளால் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகும். இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனை அனைத்தும் பொய்யென மறுக்கப்படுகிறது. உண்மையில், மனுதாரர்கள்/வாதிகள் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனு உத்தரவில் உயில் சாசனமானது உடந்த 27.06.2018ம் தேதியன்றே நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும், மேலும், அதுசம்பந்தமாக ரிட் மனுவில் அதுகுறித்து உத்தரவு வழங்க இயலாது என்றும், அதனால் மனுதாரர்/வாதிகள் உரிய சிவில் நீதிமன்தற்தி்ன் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளதே தவிர வழக்கு தபசில் சொத்துக்களைப் பொறுத்து சின்னத்தம்பி கோனார் அவர்க்ள டகந்த 08.05.2015ம் தேதி செம்புக்குட்டி கண்ணனுக்கு ஏற்படத்திக் கொடுத்த உயில் ஆவணம் செல்லாது என்றோ கூறவில்லை. மேலும், செ்னனை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் ரிட் மனுவின் 3வது பிரதிவாதி உட்பட அனைத்து

தரப்பினரிடமிருந்தும் மேலும் உத்தரவின்மீது 3ம் பிரதிவாதினா உதயலட்சுமியிமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லையென்றும், மேலும் 1ம் பிரதிவாதியான உதயலட்சுமி 13ம் தபசில் சொத்தைப் பொறுத்து விற்பனை ஒப்பதம் செய்தார் என்றும், அதைத் தெரிந்துகொண்ட மனுதாரர்கள்/வாதிகள் திருப்போரூர் சப்ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் ஆட்சேபணை தெரிவித்ததாகவும் மனுவில் கூறியுள்ளது பொய்யாகம். அவ்வாறு மனுதாரர்கள்/வாதிகள் கொடுத்த ஆட்சேபணையின் பேரில் திருப்போரூர் துணை பதிவாளர் விற்பனை ஒப்பந்தப்பதிவை தற்காலிகமாக நிறுத்திவிட்டார் என்றும் கூறியுள்ளது பொய்யாகும். அதனால் இவ்வழக்கில் 9 முதல் 11ம் எதிர்மனுதாரர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கக்கோரியுள்ள 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் வரமாட்டார்கள். அதனால் மேற்படியார்களை வழக்கில் 9 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்களை சட்டப்படி சேர்க்க இயலாது. மேலும் 9 முதல் 11 எதிர்மனுதாரர்க்ள வழக்கிற்கு அவசியக் கட்சிக்காரர்கள் கிடையாது. எனவே, மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் 9 முதல் 11 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்**

மனுதாரர்கள்/வாதிகள் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகள் ஆகும். மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ள சங்கதிகளை சாட்சிய ஆவணங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்கள்/வாதிகள் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளைக் கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனுவானது எதிர்மனுதாரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் அனைவரும் இறந்துபோன சின்னத்தம்பி கோனாரின் வாரிசுகள் என்றும், சின்னத்தம்பி கோனார் அவர்கள் இறப்பதற்கு முன்பு வழக்கு தபசில்

சொத்துக்களைப் பொறுத்த 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் கணவரான செம்புக்குட்டி கண்ணன் என்பவருக்கு கடந்த 08.05.2015ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பதிவு செய்யப்பட்ட போலி உயில் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது பொய்யான சங்கதிகள் ஆகும். மேலும், 9 முதல் 11 வரையான உத்தேச எதிர்மனுதாரர்களாக சேர்க்க கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேலும், உத்தேச எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற அதிகார எல்லைக்கு அப்பால் வசித்து வருபவர்கள் ஆவார்கள். மேலும், 9 முதல் 11 வரையான உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் கட்சியாக சேர்க்கும்பட்சத்தில் வீண் கால அவகாசம் ஏற்படும். தாவா மனுதாரர் நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாகும். மேற்படி 9 முதல் 11 வரையான உத்தேச பிரதிவாதிகள் வழக்கில் தேவையற்ற கட்சிக்காரர்கள் ஆவர்கள். அதனால் மனுவை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

8) **<u>தீர்வு</u>**:-

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. இந்த மனுவில் 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களாக திருப்போரூர் சார்பதிவாளர், மாவட்ட பதிவாளர், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தாவா

சொத்து அமைந்துள்ள இடமானது சாத்தூர், ஜமீன் பெரியகொல்லப்பட்டி திருப்போரூர் சத்திரப்பட்டி கிராமங்கள் ஆகும். அவை சாத்தூர் வட்டத்திற்கு உட்பட்டதாகும். மேற்படி சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மோசடியான புனையப்பட்ட உயிலில் கண்ட 13 வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து 3 வது நபருக்கு கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாகவும், அதனைப் பொறுத்து மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மெய்ப்பிப்பதற்காக 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டியது அவசியமாகும். தவறும்பட்சத்தில் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு ஆட்படக்கூடும். மேலும், மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானவையா? இல்லையா? என்பதையும் மேற்படியார்களை தரப்பினர்களாக சேர்த்தால் மட்டுமே தீர்மானிக்க முடியும். எனவே, மனுதாரர்களால் 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி 21.08.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 9 முதல் 11 எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி 21.08.2023 ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும்

இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.